**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 119/2009**

**PROSECUTION WITNESS NO. 9**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : எஸ். மெய்ஞானம் | **Caste** | : |
| **Father's/Husband Name** | : சதாசிவம் | **Religion** | : **Hindu** |
| **Village** | : தஞ்சாவூர் ஜோதி நகர், | **Calling** | : அரசு ஊழியர் (ஓய்வு) |
| **Taluk** | : தஞ்சாவூர். | **Age** | : **73/2023** |

**(A1 died, A2 present, A3 absent , Petition U/s 317(1) of Cr.P.C filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.02.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திரு எம். செழியன், தட்டச்சர்**

**C.C.No. 119/2009 23.02.2023 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.25**

**முதல் விசாரணை:**

1) நான் தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.07.2008 அன்று பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2006 ம் ஆண்டு நான் தஞ்சாவூர் மாவட்ட குற்றப் பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 13.04.2006 ம் தேதி தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலையத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட மேற்படி காவல் நிலைய குற்ற எண். 140/2006 சட்டப் பிரிவுகள் 120(b), 465, 466, 467, 471, 420 r/w 511 IPC வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பெற்று காவல் கண்காணிப்பாளர் உத்தரவு எண். RC/C2/11309/2006 dated 10/04/2006 ன்படி முதல் தகவல் அறிக்கையை பார்வையிட்டதில் ஒரத்தநாடு பட்டாணி தெருவைச் சேர்ந்த முகமது பாரூக் என்பவர் இந் நீதிமன்றத்தில் கொடுத்த புகாரானது தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, நீதிமன்ற உத்தரவுபடி மேற்படி காவல் நிலைய ஆய்வாளர் இரவிச்சந்திரன் என்பவர் வழக்கு பதிவு செய்து இருந்தார். மேற்படி' வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அ.சா.1, 2 மற்றும்3 ஆகியோர்களுக்கு சம்மன் அனுப்பி 04.05.2008 ம் தேதியன்று கிராம நிர்வாக அலுவலர் அ.சா.3 இராஜேந்திரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.07.2008 ம் தேதி அ.சா. 1 முகமது பாரூக், அ.சா.2 முகமது இஸ்மாயில் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்பு நான் பணி

**C.C.No. 119/2009    23.02.2023**

ஓய்வு பெற்றுவிட்டேன். மாவட்ட குற்றப் பிரிவில் அடுத்து நியமனம் செய்த காவல் ஆய்வாளரிடம் மேல் நடவடிக்கைக்காக வழக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டது-

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.